1992 மார்ச் 13]

203—

பெரியார் நகரிலிருந்து திருவான்மியூருக்கு விரைவுப் பேருந்து.

*4543 திரு. ப. ரங்கநாதன்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை பெரியார் நகர் பேருந்து நிலையத்திலிருந்து அண்ணா சாலை, இராயப்பேட்டை, லஸ், மயிலாப்பூர், மந்தவெளி, அடையாறு வழியாக திருவான்மியூருக்கு குறிப்பிட்ட இடங்களில் நின்று செல்லும் விரைவுப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 9-50

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் ‘இல்லை’ என்று கூறிவிட்டார். இருந்தாலும், போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் கவனத்திற்கு, அப்பகுதியில் வாழும் பொது மக்கள் இராயப்பேட்டை, மைலாப்பூர் நேரடிப் பேருந்து வசதி இல்லாததால் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு, மேற்படி வழித்தடத்தில் புதிய பேருந்து விட அரசு மீண்டும் ஆய்வு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல அண்ணா சதுக்கம், திருவல்லிக்கேணி, சைதாப்பேட்டை, காயிதே மில்லத் கலைக் கல்லூரி, திருவான்மியூர் போன்ற பகுதிகளில் எட்டு வழித்தடங்களில் 34 பேருந்துகள் மூலமாக நாள் ஒன்றுக்கு 456 நடைகள் இயக்கப்படுகிறது. ஆகவே, இது தேவை இல்லை என்று நான் கருதுகிறேன்.

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டது, பெரியார் நகரிலிருந்துதான் பேருந்து வசதி ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டேன்.

அமைச்சரவர்கள் சென்னை மவுண்ட் ரோடு, திருவல்லிக்கேணி என்று எல்லா இடங்களையும் குறிப்பிட்டு இங்கே பதிலுரை கொடுத்திருக்கிறார். மீண்டும் போக்குவரத்துத் துறை அமைச்சரவர்களிடத்தில் கேட்பது எங்கள் பெரம்பூர் பகுதியிலிருந்து, குறிப்பாக பெரியார் நகரிலிருந்து சென்னை கோட்டையில் பணி செய்கின்ற அரசுத் தொழிலாளர் வாழ்கின்ற அந்தப் பெரியார் நகர்—அந்த நகரிலேயிருந்து 29-சி தடத்தில் இயங்கும் பேருந்துகளைப் பெரியார் நகரிலிருந்து இயக்க அரசு பரிந்துரை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, பெரியார் நகரிலிருந்து இயக்கப்படுகின்ற பேருந்துகளினுடைய வழித் தடங்களைப் பற்றித்தான் நான் குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலியுறுத்துகிற காரணத்தால் தமிழகத்தின் ஒப்பற்ற தலைவியாக இருக்கிற தமிழகத்தின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவியின் ஆட்சியில் அதில் பரிசீலனை மேற்கொள்ளப்படும் என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 204, திரு. எஸ். ஆர். ஜெயராமன், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

204—

சந்தனமரக் கடத்தல் தொடர்பான வழக்குகளை விசாரிக்க தனி நீதிமன்றம்

*5022 திரு. எஸ். ஆர். ஜெயராமன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சந்தன மரங்களைக் கடத்திச் செல்லும் குற்றங்கள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டு முடிவுபெறாமல் உள்ள வழக்குகளை விசாரிக்கும் பொருட்டு சேலம் நகரில் நீதித்துறை மாஜிஸ்டிரேட் தனி நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். இது குறித்து அரசின் ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும்.

TRUTH ALONE TRIUMPHS